(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 3(5).]

# பாராளுமன்றம்

## 3 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2011, யூன் 10, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2011, யூன் 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0926/ '10

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கொழும்பு துறைமுகத்தின் புதிய கொள்கலன் இறங்குதுறையை நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த செலவினம் யாதென்பதையும்;

(ii) அந்த மொத்தச் செலவினத்தில் உள்நாட்டிலிருந்து பெறப்படும் தொகை யாதென்பதையும்;

(iii) வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் தொகை எவ்வளவு யாதென்பதையும்;

(iv) அந்தக் கருத்திட்டத்திற்கு நிதி கிடைக்கும் வழிகள் யாவையென்பதையும்;

(v) மொத்தச் செலவினத்தில் கடனாகக் கிடைக்கும் தொகை யாதென்பதையும்;

(vi) கடன் தொகைகளை வழங்கும் நாடுகள், குறிப்பிட்ட வட்டி வீதங்கள் மற்றும் கடனை அடைக்கும் கால எல்லைகள் யாவையென்பதையும்;

(vii) முழுமையான கருத்திட்டத்தையும் பூர்த்தி செய்ய எடுக்கும் காலம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) இந்தக் கருத்திட்டத்தின் பணிகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் விதி முறை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1201/ '11

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2004 ஆம் ஆண்டு சுனாமி(ஆழிப்பேரலை) அனர்த்தத்தின்போது சாய்ந்தமருது பிரதேச செயலாளர் பிரிவில் அழிவடைந்த வீடுகளின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வீட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு 460 வீடுகள் இன்னும் தேவைப்படுகிறதென்பதை அவர் அறிவாரா?

(இ) (i) ஏறத்தாழ ஏழு வருடங்களாகத் தொடர்ந்தும் இடம்பெயர் முகாம்களில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிசெய்வதற்கென மேற்கொள்ளப் படவிருக்கும் நடவடிக்கை பற்றியும்;

(ii) சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களின் வீடமைப்புத்தேவைகள் பூர்த்திசெய்யப் படுவதற்கான ஏதாவது காலக்கெடுவையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1202/ '11

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ரூபவாகினிக்கூட்டுத்தாபனத்தில் நியமனம் செய்யப்படும் நிரந்தர தயாரிப்பாளர் ஒருவருக்கு இருக்கவேண்டிய அடிப்படைத் தகைமையும்;

(ii) இலங்கை ரூபவாகினிக்கூட்டுத்தாபனத்தில் தற்போது கடமையாற்றும் நிரந்தர தயாரிப்பாளர்களின் எண்ணிக்கையையும்;

(iii) இலங்கை ரூபவாகினிக்கூட்டுத்தாபனத்தில் தற்போது கடமையாற்றும் அத்தகைய நிரந்தர தயாரிப்பாளர்கள் ஒவ்வொருவரினதும் தகைமைகளை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011, பெப்புருவரி மாதம் 19 ஆம் திகதிய 1693/25 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011, ஏப்பிறல் மாதம் 08 ஆம் திகதிய 1700/22 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்டு 2011, மே மாதம் 02 ஆம் திகதிய 1704/7 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கிழான இறக்குமதிகள் தீர்வைகள் சம்பந்தமான தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2011 மே 16 ஆம் திகதிய 1706/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— அரசியலமைப்பின் 44(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 14 ஆம் பிரிவு மற்றும் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியால் ஆக்கப்பட்டு, 2011, மே மாதம் 16 ஆம் திகதிய 1706/1 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 9 ஆம் பிரிவின் 1 ஆம் உப பிரிவின் (ஈ) பந்தியின் கீழ் மற்றும் அச்சட்டத்தின் 21, 22, 23 மற்றும் 24 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2011, மே 04 ஆம் திகதிய 1704/09 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.06.09ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்கு விதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது).

*

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

*

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்-2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

*

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை-2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது)

*

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை-2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.1),— 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால், தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் செய்யப்பட்ட கட்டளை இல.26 இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளை அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

## 2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழான கட்டளை இல. 26

2010 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான் அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் இக் கட்டளை மூலம் அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் 31003 ஆம் இலக்க, செயற்பாட்டு விடயம் "முடிக்கப்பட்ட வேலை முற்பணக் கணக்கு — அரச தொழிற்சாலை" என்பதற்கெதிராக குறித்துரைக்கப்பட்ட எல்லைகளை மாற்றுகின்றேன்:-

(i) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட செலவின் உச்ச எல்லை — ரூபா 260,000,000 இலிருந்து ரூபா 280,000,000 வரை.

(ii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் III இல் குறித்துரைக்கப்பட்ட பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லை — ரூபா 280,000,000 இலிருந்து ரூபா 268,000,000 வரை.

(iii) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் IV இல் குறித்துரைக்கப்பட்ட பற்று மீதியின் உச்ச எல்லை — மீளாய்வு செய்யப்படவில்லை.

(iv) அச்சட்டத்தின் மூன்றாம் அட்டவணையின் நிரல் V இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்புக்களின் உச்ச எல்லை — ரூபா 0 இலிருந்து ரூபா 2,000,000 வரை.

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

*ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ*
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

2011.04.29 ஆந் திகதி
கொழும்பு 01.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழான தீர்மானம் (இல.2),— 2010ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன், நிதி, திட்டமிடல் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது. (பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

(இக்கட்டளை 2010.12.31 ஆம் திகதி வரை மட்டுமே செல்லுபடியாகும்.)

## அட்டவணை

### 2010 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்

நிதி ஆண்டு 2010 தொடர்பில் 2010 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சினால் அதிகாரமளிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான முற்பணங்கள் சம்பந்தமான முற்பணக் கணக்குகளின் எல்லைகளின் மாற்றங்களின் அட்டவணை

| தொ. இல. | அமைச்சு / திணைக்களம் | விடய இல. | II அரசாங்கத்தின் செயற்பாடுகளின் செலவினத்தின் உச்ச எல்லைகள் | | III அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பெறுகைகளின் ஆகக் குறைந்த எல்லைகள் | | IV அரசாங்கத்தின் செயற்பாடுகளின் பற்று மீதிகளின் உச்ச எல்லைகள் | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | ரூபா இருந்து | ரூபா வரை | |
| 1. | புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் | 17401 | - | - | 100,000 | 350,000 | 3,000,000 | 10,000,000 | 1 |
| 2. | நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் | 12301 | - | - | 7,400,000 | 4,000,000 | - | - | 2 |
| 3. | கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சர் | 14001 | - | - | 5,800,000 | 4,600,000 | - | - | 3 |
| 4. | போக்குவரத்து அமைச்சர் | 11401 | - | - | 8,200,000 | 4,500,000 | - | - | 4 |
| 5. | அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் | 10601 | - | - | - | - | 8,000,000 | 11,500,000 | 5 |
| 6. | மாவட்டச் செயலகம், கொழும்பு | 25501 | - | - | 35,000,000 | 29,000,000 | 170,000,000 | 175,000,000 | 6 |
| 7. | மாவட்டச் செயலகம், மாத்தளை | 25901 | - | - | 32,000,000 | 26,000,000 | - | - | 7 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 8. | மாவட்டச் செயலகம் /கச்சேரி, மட்டக்களப்பு | 26901 | - | - | | | 50,000,000 | 82,000,000 | 8 |
| 9. | மாவட்டச் செயலகம் /கச்சேரி, திருகோணமலை | 27101 | - | - | 15,000,000 | 13,500,000 | | | 9 |
| 10. | மாவட்டச் செயலகம், அனுராதபுரம் | 27401 | - | - | 40,000,000 | 30,000,000 | | | 10 |
| 11. | மாவட்டச் செயலகம், மொனராகலை | 27701 | - | - | 21,000,000 | 19,000,000 | - | - | 11 |
| 12. | மாவட்டச் செயலகம், இரத்தினபுரி | 27801 | - | - | | | 146,000,000 | 148,000,000 | 12 |
| 13. | துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சர் | 11301 | - | - | 5,600,000 | 5,159,000 | | | 13 |
| 14. | மோட்டார் போக்குவரத்து திணைக்களம் | 30701 | - | - | | | 65,000,000 | 95,000,000 | 14 |
| 15. | சமுதாயஞ்சார் சீர்திருத்த திணைக்களம் | 32601 | - | - | - | - | 13,000,000 | 20,000,000 | 15 |
| 16. | இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு | 02201 | - | - | 292,000 | 0 | - | - | 21 |
| 17. | வியாபாரத் தீர்வை மற்றும் முதலீட்டுக் கொள்கைத் திணைக்களம் | 24401 | - | - | 2,000,000 | 1,980,000 | - | - | 22 |
| 18. | சட்ட அலுவல்கள் திணைக்களம் | 32301 | - | - | - | - | 1,000,000 | 1,102,769 | 23 |

20011 ஏப்பிறல் 29 ஆம் திகதி
கொழும்பு - 01.

ஒப்பம் : மஹிந்த ராஜபக்ஷ
நிதி, திட்டமிடல் அமைச்சர்.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2011, யூன் 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0905/ '10

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஐந்து ஆண்டுகளுக்கும் அதிகமாக கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றிய ஆங்கில ஆசிரியர்களுக்கு இரு கட்டங்களில் (அ.நி.சுற்றறிக்கை இல. 13 /2005 மற்றும் 21 / 2006 இன் கீழ் ) நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளனவென்பதையும் ,

(ii) மேற்படி அ.நி. சுற்றறிக்கையின் படி கல்வி அமைச்சின் செயலாளரது ED / 2 / 29 / 4 / 1 / 46 ஆம் இலக்க 2005 / 7 /19 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின் படி, 2005/7/28 ஆம் திகதி முதல் மேற்படி ஆசிரியர்களில் ஒரு சிலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், 2003 – 2004 ஆண்டுகளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் தொடர்ந்து கடைமையாற்றுகின்ற சுமார் 50 ஆசிரியர்களுக்கு இது வரை நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அம்பாறை மாவட்டத்தின் அம்பாறை, அக்கறைப்பற்று மற்றும் சம்மாந்துறை கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்,

(ii) மட்டக்களப்பு மாவட்டத்தின் பட்டிரிப்பு, கல்குடா மற்றும் மட்டக்களப்பு கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடைமையாற்றுகின்ற அத்தகைய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கும்

துரிதமாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

0942/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தில் ஜாதிக சவிய மற்றும் கம நெகும கருத்திட்டங்களின் கீழ் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய வீதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அதற்காக செலவு செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டங்களின் கீழ் நன்மை அடையும் குடும்பங்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0977/ '10

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கல்வி அமைச்சினால் குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளாக இனங்காணப்பட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும் ,

(ii) இப்பாடசாலைகளில் முஸ்லிம் பாடசாலைகள் மற்றும் தோட்டப் பாடசாலைகளின் எண்ணிக்கை தனித்தனியே யாவையென்பதையும்,

(iii) மேற்படி பாடசாலைகளின் வளர்ச்சிக்காக எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் மாவட்ட மட்டத்தில் தனித்தனியே யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

0981/ '10

கௌரவ எம்.ரீ.ஹஸன் அலி,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சவூதி அரேபியாவில் நடைமுறையில் உள்ள சட்டம், இஸ்லாமிய ஷரீஆ சட்டம் என்பதையும்;

(ii) இஸ்லாமிய ஷரீஆ சட்டத்துக்கு அமைய, நீதிமன்றம் எவரேனும் ஒரு நபருக்கு மரண தண்டனை விதிக்கையில், குறிப்பிட்ட குற்றவாளி சட்ட விரோதச் செயலை அல்லது குற்றத்தை புரியும் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் கவனித்தல் கொள்ளப்படுகின்றது என்பதையும்;

(iii) தற்போது சவூதி அரேபியாவில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள செல்வி றிசானா நபீக், இக்குற்றச்சாட்டுக்கு உள்ளாகின்ற போது அவர் உண்மையிலேயே 17 வயதுடையவராக இருந்தார் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், செல்வி றிசானாவுக்கு போலி பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை மற்றும் இலங்கை கடவுச் சீட்டு விண்ணப்பப் படிவத்தை அத்தாட்சிப்படுத்திய சமாதான நீதவானுக்கும் வெளிநாடு செல்வதற்கு உதவிய வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவன உரிமையாளருக்கும் எதிராக இற்றைவரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) றிசானாவுக்கு எதிராக அந்நாட்டு நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட விசாரணையின்போது உரிய விதத்தில் விடயங்களை முன்வைக்கத் தவறிய இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அவருக்கு அத்தண்டனை விதித்தமைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2011, யூன் 23, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0624/ '10

கௌரவ ஆர். யோகராஜன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) கொழும்பு 12, ஹுசைனியா வீதி, இலக்கம் 45 இல் அமைந்துள்ள ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் கடும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாடசாலையில் அங்கீகரிக்கப்பட்ட சிங்கள, தமிழ் மொழி மூல ஆசிரிய ஆளணியை பாடவாரியாகவும்;

(ii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போதுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கையையும்;

(iii) ஒவ்வொரு மொழி மூலத்திலும் பாடரீதியாக தற்போது காணப்படுகின்ற ஆசிரியர் பற்றாக்குறை எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கையையும்,

(v) அந்நடவடிக்கைகள் எப்போது மேற்கொள்ளப்படுமென்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(இ) ரோயல், ஆனந்த மற்றும் நாளந்த ஆகிய கல்லூரிகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளனர் என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) மேற்படி (இ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடசாலைகளில் மேலதிகமாக காணப்படுகின்ற ஆசிரியர்களது எண்ணிக்கையை போதனா மொழி ரீதியாகவும் பாடவாரியாகவும் யாதென்பதையும்,

(ii) ஹமீட் அல் ஹுசைனியா கல்லூரியில் தற்போது நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்காக மேலதிக ஆசிரியர்களை இப்பாடசாலைக்கு இடமாற்றம் செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

1150/'11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திரு/புல்மோட்டை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் 2010 ஆம் ஆண்டில் ஆசிரியர்கள் 68 பேர் கடமையாற்றினார்கள் என்பதையும்;

(ii) எட்டு வருடங்கள் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களை இடமாற்றம் செய்கின்ற ஆசிரியர் இடமாற்ற கொள்கைக்கு அமைவாக மேற்படி பாடசாலையின் ஆசிரியர்கள் 30 பேர் இடமாற்றம் செய்யப்பட்டனர் என்பதையும்;

(iii) புதிதாக இடமாற்றம் பெற்றுள்ள ஆசிரியர்கள் ஏழு பேர் பாடசாலைக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள் என்பதையும்;

(iv) மாணவர்கள் 1500 பேருக்கும் அதிகமானவர்கள் கல்வி கற்கும் மேற்படி பாடசாலைக்கு ஆசிரியர்கள் 72 பேர் அவசியமாக உள்ள போதிலும், தற்போது கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை 42 மாத்திரமே என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) திரு/புல்மோட்டை முஸ்லிம் மஹா வித்தியாலயத்தில் நிலவுகின்ற மேற்படி ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2011, யூலை 05, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0285/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் வரும் திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றையும்,

(ii) மேற்படி அமைச்சின் தற்போதைய மொத்தச் செலவினத்தை மாத மற்றும் வருட வாரியாகவும்,

(iii) நிரந்தர பணியாள் தொகுதியின் எண்ணிக்கையையும் அவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்த மொத்த ஊதியங்களையும்,

(iv) 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கு வெவ்வேறாக நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் அவர்களின் பணியாள் தொகுதியினர் ஆகியோருக்கான மாதாந்த மொத்தச் செலவினத்தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0717/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 1994 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் உள்ள திர்வை வரியற்ற வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வாறான ஒவ்வொரு தீர்வை வரியற்ற வர்த்தக நிலையமும் வழங்கப்பட்டுள்ள அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ள நபர்களின் பெயர், முகவரிகள் தனித்தனியே யாவையென்பதையும்,

(iii) அவ்வாறான கடைத்தொகுதிகள் வழங்கப்பட்டுள்ள மொத்த நிதித் தொகை அல்லது நிரந்தரமாக ஒப்படைப்பதற்கு அரசாங்கம் பெற்றுக்கொண்ட நிதித் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய கடைத்தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனின், அதனை ஆரம்பிக்கும் திகதி யாதென்பதையும்,

(iii) அதன் கீழ் நிர்மாணிக்க எதிர்பார்க்கும் வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1163/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் புகையிரத திணைக்களத்தினால் தீயணைக்கும் கருவிகள் ஏதேனும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், கொள்வனவு செய்யப்பட்ட தீயணைக்கும் கருவிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இதற்கு செலவாகிய பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) புகையிரதப் பெட்டிகளில் பொருத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட தீயணைக்கும் கருவிகள் காலாவதியாகியவைகள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கு பொறுப்புக் கூறவேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0656/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டிலுள்ள பாரிய அரசாங்கத் திணைக்களங்கள் பத்தினையும்,

(ii) அவை எவ்வாறு பாரிய பத்துத் திணைக்களங்களாக் கருதப்படுகின்றன என்பதையும்,

(iii) ஒவ்வொரு திணைக்களத்திலும் இடப்பட்டுள்ள மூலதனத்தினையும் அவற்றுள் தற்போதுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கையினையும்,

(iv) இற்றைவரையான கடந்த ஐந்து வருடங்களில் ஒவ்வொரு திணைக்களத்தினதும் இலாபம் அல்லது நட்டத்தினை வருடாந்த அடிப்படையிலும்,

(v) ஒவ்வொரு திணைக்களத்தினதும் சந்தைப் பங்கினையும்

அவர் அறியத் தருவாரா?

(ஆ) மேலேயுள்ள திணைக்களங்களில் நட்டமீட்டுகின்ற திணைக்களங்களை இலாபமீட்டும் திணைக்களங்களாக மாற்றமுடியுமா என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0732/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு முதல் இதுவரை வெளிநாடுகளில் மரணமடைந்த வெளிநாடு சென்ற ஊழியர்களின் எண்ணிக்கை மாதாந்த அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்,

(ii) அந்த மரணங்களுக்கான காரணங்கள் எவை என்பதையும்,

(iii) அவ்வாறு மரணித்தவர்களில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட பிரதேசங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(iv) பிரேதங்களைக் கொண்டுவர முடியாத நிலையேற்பட்டிருப்பின் அதற்கான காரணங்கள் எவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி மரணித்தவர்களுக்காக இன்றுவரை இழப்பீடு வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்,

(ii) மரணித்தவர்களுக்காக இழப்பீடு வழங்கப்படாத சந்தர்ப்பங்கள் இருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1169/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தெஹிவளை மேம்பாலம் திறந்து வைக்கப்பட்ட திகதியையும் யாரால் திறந்து வைக்கப்பட்டதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தெஹிவளை மேம்பாலத்தை நிர்மாணித்ததன் மூலம் ஈடேற்றிக்கொள்ள எதிர்பார்த்த நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) தற்போது குறித்த பாலத்தில் கனரக வாகனங்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) தற்போது, மேற்படி மேம்பாலத்தினூடாக கனரக வாகனங்கள் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டிருப்பின், குறித்த பாலத்தை நிர்மாணித்ததன் மூலம் ஈடேற்ற எதிர்பார்த்திருந்த நோக்கங்கள் நிறைவேறவில்லையென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0657/ '10

கௌரவ ரவி கருணநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டின் 30 மிகப் பெரிய அரசுக்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் எவை என்பதையும்;

(ii) அவை அரசுக்குச் சொந்தமான 30 மிகப் பெரிய தொழில்முயற்சிகளாக எவ்வாறு கருதப்படுகின்றன என்பதையும்;

(iii) ஒவ்வொன்றிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள மூலதனம், மற்றும் தற்போதுள்ள பணியாட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) ஒவ்வொரு நிறுவனத்தினதும் இற்றைவரையிலான கடந்த 5 வருடங்களுக்கான இலாப, நட்டத்தை வருடாந்த அடிப்படையிலும்;

(v) அரசுக்குச் சொந்தமான ஒவ்வொரு தொழில்முயற்சியினதும் சந்தைப் பங்கு எவ்வளவு என்தையும்;

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்சொன்ன தொழில்முயற்சிகளில், நட்டத்தில் இயங்கும் ஒவ்வொன்றையும் இலாபமீட்டும் தொழில் முயற்சிகளாக்க முடியுமா எனக் கூறுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0965/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டில் கைதுசெய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களில் சிறையிலிடப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) இவர்கள் சிறையிலிடப்படுவதற்கு காரணமாக அமைந்த தவறுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2010 ஆம் ஆண்டில் விரிவுரைகளில் பங்கேற்பதற்கு தடைவிதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி விரிவுரைகளில் பங்கேற்பதற்கு தடைவித்தமைக்கான காரணம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
# (2011, யூலை 05, செவ்வாய்க்கிழமை)

0199/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ரிதீமாலியத்த பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்த காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வன வாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0200/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0201/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கந்தகெட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வன வாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0202/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மீகஹகிவுல பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக்கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியினளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வன வாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எத்தனை ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0203/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சொரணாதொட்ட பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக்கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியினளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0204/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பதுளை பிரதேச செயலாளர் பிரிவில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுச் சட்டத்திற்கமைய ஆரம்பத்தில் ஆணைக்குழு கொண்டிருந்த மொத்தக் காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவற்றில் இதுவரை விற்கப்பட்டுள்ள காணிகளினளவு எவ்வளவென்பதையும்,

(iii) அதில் 5 ஏக்கருக்குக் கூடுதலான விற்பனைகளில் காணியின் பெயர், காணியின் அளவு, விற்கப்பட்ட திகதி, கொள்வனவாளர், விற்கப்பட்ட தொகை யாதென்பதையும்

இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்கூறப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகள் நீண்டகால குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், வழங்கப்பட்ட காணியின் பெயர், குத்தகைக் கொள்வனவாளர், வழங்கப்பட்ட திகதி, பெற்றுக்கொண்ட குத்தகைப் பணம், குத்தகை முடிவுத் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) மேற்கூறப்பட்ட பிரிவில் எஞ்சியுள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணியின் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) அவை கிராம அலுவலர் பிரிவினடிப்படையில் எவ்வளவு ஏக்கர்களென்பதையும்,

(iii) அவை அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

## 2011, யூலை 06, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

0833/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கட்டுநாயக்க விமான நிலையத்தில் கடமையில் அமர்த்தப்பட்டுள்ள குடிவரவு, குடியகல்வு திணைக்கள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) விமான நிலையத்தில் கடமைபுரியும் மேற்படி ஊழியர்கள் பூர்த்தி செய்யவேண்டியுள்ள தகைமைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் கடமைகளின் பொருட்டு மேற்படி திணைக்களத்தைச் சாராத வெளி ஆட்கள் அமர்த்தப்பட்டுள்ளார்களா என்பதையும்,

(ii) ஆமெனில், இவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்,

(iii) மேற்படி ஆட்களின் தகைமைகள் யாவையென்பதையும்,

(iv) அவ்வாறானவர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0721/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெருந்தோட்டக் கைத்தொழில்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் கருத்திட்டங்கள் அமைந்துள்ள இடங்களையும்;

(ii) அவ்வாறான ஒரு பிரிவு களுத்துறை மாவட்டத்தில் அமைந்துள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் அவ்வமைவிடத்தின் பெயரினையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கணக்காய்வாளர் நாயகம் ஆய்வுக்குட்படுத்திய, பிணைச் சொத்துக்கள் இல்லாத, 2000ம் ஆண்டின் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சிக் கருத்திட்டங்களின் செலவு 700-800 மில்லியனா என்பதையும்;

(ii) அவ்வாறில்லையெனின், மேற்குறிப்பிடப்பட்ட வருடத்தில் ஆராய்ச்சிக்கு ஏற்பட்ட செலவின் சரியான தொகையினையும்;

(iii) இலஞ்சம் அல்லது ஊழலை விசாரிப்பதற்கான ஆணைக்குழுவிற்கு இவ்விடயம் ஆற்றுப்படுத்தப்பட்டதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின் விசாரணையின் பெறுபேற்றினையும்

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(இ) உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட போது செலவழிப்பதற்கு இவ்வளவு பணத்தினைக் கொண்டிராத இந்த நிறுவனத்திற்கு, பணம் எந்த மூலத்திலிருந்து வழங்கப்பட்டதென்பதை அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0722/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (I) முதலீட்டுச் சபைச் சட்டத்தின் பிரிவு 16 மற்றும் 17 இன் கீழ் 2009. 01. 01 ஆம் திகதி முதல் இற்றைவரை, முதலீட்டுச்சபையுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட அரச தொழில்முயற்சிகளினதும் கம்பனிகளினதும் எண்ணிக்கையை வருடாந்த அடிப்படையிலும் பிரிவு அடிப்படையிலும்;

(II) இற்றைவரை வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ள மேற்குறிப்பிட்ட (அ) (1) இல் குறிப்பிடப்பட்ட தொழில்முயற்சிகளின் எண்ணிக்கையையும்;

(III) மேற்படி (அ)(i) இன் பிரகாரம் செய்யப்பட்டுள்ள முதலீட்டின் பெறுமானத்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (I) மேற்சொன்ன கம்பனிகள் அனுபவிக்கும் வரி விடுமுறை காலத்தையும்;

(II) 01.01.2006 தொடக்கம் 31.12.2008 வரையுமான காலப்பகுதியில் பதிவு செய்து நடவடிக்கைகளை ஆரம்பித்த கம்பனிகளின் எண்ணிக்கையை, வருடாந்த அடிப்படையிலும் முதலீட்டுச் சபை பிரிவு அடிப்படையிலும்,

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

0966/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வரையறுக்கப்பட்ட இலங்கை சலுசல நிறுவனத்தின் தற்போதைய தலைவரை நியமித்த அதிகாரியின் பெயர் யாது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி தலைவரின்,

(i) முழுப் பெயர் மற்றும் வயது;

(ii) கல்வித் தகைமைகள்;

(iii) முன்னர் பணிபுரிந்த இடம்,பதவி மற்றும் தொழில் அனுபவம்;

(iv) தற்போதைய மாதாந்தச் சம்பளம் மற்றும் கிடைக்கின்ற ஏனைய கொடுப்பனவுகள்

யாவையென்பதை அவர் இச்சபைக்கு முன்வைப்பாரா?

(இ) இன்றேல் ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
# (2011, யூலை 06, புதன்கிழமை)

0175/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தங்கல்ல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு/நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0668/ '10

கௌரவ அநுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) கடந்த 5 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு வருடத்திலும்,

(i) இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா, சீனி, பழங்கள், பலசரக்கு பொருட்கள் உள்ளிட்ட அனைத்து உணவுப் பொருட்களினதும் அளவு எவ்வளவென்பதையும்,

(ii) மேற்படி பொருட்கள் எந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன என்பதையும்,

(iii) இவற்றை இந்நாட்டினுள் இறக்குமதி செய்த நிறுவனங்கள் மற்றும் நபர்கள் யாவர் என்பதையும்,

(iv) இந்நாட்டில் தரையிறக்கிய போது ஒவ்வொரு உணவுப் பொருளினதும் பெறுமதி யாதென்பதையும்

தனித்தனியே அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0176/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பெலியத்த பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங் களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0858/ '10

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மேல், சப்பிரகமுவா, வடமேல், மத்திய, ஊவா, வடமத்திய, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் மத்திய அரசு மற்றும் மாகாண சபைக்குரிய பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்பட இருக்கின்றதா என்பதை அவர் ஒவ்வொரு மாகாணத்துக்கும் அமைய வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அல்லது நிலுவைச் சம்பளங்கள் செலுத்தப்பட இருப்பின் 2010.01.01 ஆந் திகதியாகும் போது, அந்தந்த மகாகாண அடிப்படையில் ஆசிரியர்களுக்கு செலுத்த வேண்டிய நிலுவைப் பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) மேற்படி நிலுவைச் சம்பளத்தை செலுத்துவதற்கு அரசினால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அவ்வாறு ஒதுக்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) நிலுவைச் சம்பளங்கள் செலுத்தாமையினால் மேற்படி ஆசிரியர்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ள தென்பதையும்,

(ii) அவ்வாறாயின், மேற்படி ஆசிரியர்களுக்கு எத்தினத்தில் நிலுவைச் சம்பளம் செலுத்தப்படும் என்பதையும்,

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0974/ '10

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2005 - 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் வெளிநாடுகளில் தொழில்புரிந்த இலங்கையர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நாடு மற்றும் தொழில் துறையின்படி வருடாந்த அடிப்படையில் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2005 – 2010 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டுத் தொழில்புரிவோர் இலங்கைக்கு ஈட்டிக்கொடுத்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(ii) இவ்வருமானம் மொத்த அரசிறையின் சதவீதமாக எவ்வளவென்பதையும்

வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0975/ '10

கௌரவ அஜித் குமார,— வெளிநாட்டு, வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் செயற்படும் வெளிநாட்டு வேலைவைாய்ப்பு முகவர் நிலையமொன்றைப் பதிவு செய்ய வேண்டிய அரச நிறுவனம் யாது என்பதையும்,

(ii) இவ்வாறு பதிவு செய்வதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள் யாவை என்பதையும்,

(iii) இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள வெளநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பதிவு செய்யப்படாத வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் அடையாளங் காணப்பட்டிருப்பின் அந்நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை என்பதையும்,

(ii) இவ்வாறான முகவர் நிலையங்கள் தொடர்பாக இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் இனிமேல் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

(iii) 2005 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்டிருப்பினும் பிற்காலத்தில் அடிப்படை நிபந்தனைகளை மீறியதால் பதிவு இரத்து செய்யப்பட்ட அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இந்நாட்டில் செயற்படும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு உப முகவர் நிலையங்கள் உள்ளனவா என்பதையும்,

(ii) இவ்வாறான நிலையங்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் அல்லது வேறு அரச நிறுவனமொன்றில் பதிவுசெய்யப்பட வேண்டுமா என்பதையும்,

(iii) அவ்வாறாயின், அதற்குரிய நிபந்தனைகள் யாவை என்பதையும்,

(iv) அவ்வாறு பதிவு செய்யப்பட்டுள்ள உப முகவர் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர் முகவரி ஆகியவை யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2011, யூலை 07, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0724/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்திலுள்ள சமுர்த்தி கடன் பெறுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) இக்கடன் வழங்கப்பட்ட வட்டி வீதம் யாதென்பதையும்,

(iii) கடன் வழங்கும் போது கடைப்பிடிக்கப்படும் நடைமுறை யாதென்பதையும்,

(iv) இதுவரை மீட்கப்பட்டுள்ள கடன்தொகை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) சமுர்த்தி கடன் பெறுநர்களிடமிருந்து கடனை மீள் அறிவடும் போது உத்தியோகத்தர்கள் தான்தோன்றித்தனமாக செயலாற்றுகின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(இ) ஆமெனில், அது சம்பந்தமாக மேற்கொள்ளப்போகும் நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0586/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சுதந்திரம் அடைந்தது முதல் ஏனைய நாடுகளுக்கு காணிகளை அன்பளிப்பாக இலங்கை அரசாங்கம் வழங்கியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், எத்தனை பேர்ச்சுகள் அல்லது ஏக்கர்கள் வழங்கப்பட்டது என்பதையும்;

(iii) அக் காணிகளை வழங்கியமைக்கான நோக்கம் என்னவென்பதையும்;

(iv) உள்நாட்டுக் காணிகள் வழங்கப்பட்ட அத்தகைய நாடுகளிடமிருந்து அதனையொத்த காணிகளை இலங்கை பரஸ்பரம் பெற்றுக்கொண்டதா என்பதையும்;

(v) ஆமெனில், பெற்றுக்கொண்ட காணிகளின் பரப்பளவு, திகதி, நாடுகள் யாவை என்பதையும்

(ஆ) இன்றேல், ஏன்?

0967/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட சலுசல நிறுவனத்தின் தற்போதைய ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2009 ஆம் ஆணடில் ஊழியர்களின் மிகைநிலை காரணமாக கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) ஊழியர்களின் மிகைநிலை காரணமாக ஊழியர்கள் கட்டாய லீவில் அனுப்பப்பட்டுள்ள வேளையில் புதிதாக ஊழியர்கள் சேர்த்துக்கொள்ளப் பட்டிருப்பின் அதன் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) (i) மேற்படி புதிதாக நியமனம் பெற்றுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும் கிடைக்கின்ற மொத்த மாதாந்த சம்பளத்தைத் தனித் தனியாகவும்;

(ii) அதற்கு மேலதிகமாக அவர்கள் பெறுகின்ற கொடுப்பனவுகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2009ஆம் ஆண்டு முதல் இற்றைவரை சலுசல நிறுவனத்தின் செலவில் நடத்தப்பட்டுள்ள கலந்துரையாடல்கள் அல்லது செயலமர்வுகளின் எண்ணிக்கை யாவையென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நடத்துவதற்கான காரணங்களையும்;

(iii) அந்த ஒவ்வொரு நிகழ்ச்சிக்காகவும் செலவிடப்பட்டுள்ள பணம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(ஈ) இன்றேல் ஏன்?

0723/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், வருடத்திற்கு ஒரு தடவையாயினும் மேதகு ஜனாதிபதி அவர்கள் ஏற்றுமதிச் சபைக் கூட்டத்திற்கு தலைமை தாங்கியுள்ளாரா என்பதையும்;

(ii) அரசாங்க ஏற்றுமதிக் கொள்கைகளை வகுக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினர் யார் என்பதையும்;

(iii) அவ்வாறான கொள்கை உருவாக்கம் இறுதியாக எப்போது செய்யப்பட்டது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2009, 2010 ஆம் ஆண்டுகளில் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் கீழ் பணம் ஒதுக்கப்பட்ட கம்பனிகளின் பெயர்கள் மற்றும் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட பணத்தொகை ஆகியவற்றை ஆண்டுவாரியாகவும் நிறுவனவாரியாகவும்;

(ii) 2009, 2010 ஆம் ஆண்டுகளில் செஸ் வரிக்கு மீள் நிதியளிப்பதற்குப் பதிலாக அரசாங்கம் ஏற்றுமதி அபிவிருத்திச் சபைக்கு ஒதுக்கிய பணத்தின் அளவை வெவ்வேறாகவும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

0976/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட கோல்டன் ரிலிப் ரிசோசஸ் நிறுவனம் கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனம் எந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வரையறுக்கப்பட்ட கோல்டன் ரிலிப் ரிசோசஸ் நிறுவனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் ஒப்பந்தகாரராக பதிவுசெய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பதிவு எந்த ஒப்பந்தக்காரர் தரத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) மேற்படி கம்பனியின் தலைவர் உட்பட பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) இவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி கம்பனியினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
## (2011, யூலை 07, வியாழக்கிழமை)

0177/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) ஓகேவல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதிலிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0178/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கட்டுவன பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0179/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வலஸ்முல்ல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங் களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0180/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வீரகெட்டிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0181/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0182/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அம்பலந்தொட்ட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா வென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு / நிறுவனங் களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2011, யூலை 08, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0587/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) உலகலாவிய ரீதியில் செயற்படும் இலங்கைத் தூதரகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அந் நாடுகளில் இலங்கைத் தூதரகங்களைக் கொண்டிருப்பதற்கான காரணங்கள் யாவையென்பதையும்,

(iii) இலங்கைத் தூதரகம் காணப்படும் ஒவ்வொரு நாட்டிலும் வசிக்கின்ற இலங்கையர்களது எண்ணிக்கை யாதென்பதையும்,

(iv) ஏதாவது நாடொன்றில் இலங்கைத் தூதரகம் இல்லாத பட்சத்தில் அந்நாட்டில் வசிக்கின்ற இலங்கையர்களது நலன்களை எந்தத் தூதரகம் கவனிக்கிறது என்பதையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) (i) ஒவ்வொரு தூதரகத்தினதும் மொத்த பணியாள் தொகுதியினரது எண்ணிக்கையையும், தொழிலுக்கமர்த்துதல் மற்றும் தங்குமிட ஏற்பாடுகள் ஆகியவற்றிற்கான வருடாந்த செலவுகள் யாவையென்பதையும்,

(ii) தூதரகத்திற்கான ஆதனம், மற்றும் தூதரக இல்லம் ஆகியவற்றைக் கொண்டுள்ளதா என்பதையும்,

(iii) ஆமெனில், அதற்கென செலுத்தப்பட்ட விலையையும் கொடுப்பனவுகள் எப்போது செலுத்தப்பட்டது என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0842/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, ஐக்கிய நாடுகள் மாநாட்டில் கலந்துகொண்ட சனாதிபதி உள்ளிட்ட குழுவில் உள்ளடங்கிய அங்கத்தவர் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) மேற்படி மாநாட்டுக்காக ஒரு நாட்டுக்குக் கிடைக்கின்ற உத்தியோகபூர்வ அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) மேற்படிகுழு தங்கியிருந்த இடத்தின் பெயர் யாதென்பதையும்,

(iv) மேற்படி பயணத்துக்கு செலவான மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்,

(v) இச் செலவை பொறுப்பேற்பது யாரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மாநாட்டுக்கு, ஐக்கிய நாடுகள் அமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் ஏனைய நாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு நாட்டுக்கும் ஏற்ப வெவ்வேறாக யாது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0766/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கே.பி. என்று அழைக்கப்படும் முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ. நிதி சேகரிப்பாளர், யாழ்ப்பாணம் நீர்வேலி வங்கிக் கொள்ளையில் தான் ஈடுபட்டிருந்ததாக 2010 ஓகத்து 14 ஆம் திகதி பத்திரிகையாளர் ஒருவருடனான பேட்டியொன்றில் வெளியிட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆம் எனில் பொதுப்பணத்தைக் கொள்ளையடித்த குற்றச்சாட்டின் பேரில் கே.பி.க்கு எதிராக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்;

(iii) பொதுப்பணத்தைக் கொள்ளையடித்தமைக்காக கே.பி.இற்கு எதிராக வழக்குத் தொடரும் எண்ணம் அரசாங்கத்திற்கு இல்லையெனில், அது போன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார்களா அல்லது மன்னிக்கப்படுவார்களா என்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல். ஏன்?

0982/ ' 10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— மின்வலு,எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட எத்தாமல எல்லயை மையமாகக் கொண்டு தற்போது மின்சக்தி நிலையக் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கருத்திட்ட நிர்மாணிப்பு தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்ட அறிக்கையை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) இக்கருத்திட்டம் எந்த நிறுவனத்திற்குச் சொந்தமானது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்ட நிர்மாணிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ள காணியின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) சுற்றாடல் சேதம் மற்றும் கருத்திட்ட முன்மொழிவுகள் மீறப்பட்டமை காரணமாக மத்திய சுற்றால் அதிகாரசபை இதன் நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு அறிவித்துள்ளதாவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) பொருளாதாரப் பெறுமதியை எதிர்ப்பார்த்து நீர்வீழ்ச்சிகளை அண்டி மேற்கொள்ளப்பட்டுள்ள மின்சக்திக் கருத்திட்டங்களின் விளைவாக பல நிர்வீழ்ச்சிகளை நாம் இழந்துள்ளோம் என்பதையும்;

(ii) எத்தாமல எல்ல நீர்வீழ்ச்சிகூட அத்தகைய விதிக்கு இரையாகலாம் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0767/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கணக்காய்வாளர் நாயகம் தனது 2007 ஆம் ஆண்டு அறிக்கையில், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை மகாவலி அதிகாரசபை, இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிலையம், இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவற்றின் கணக்குகளை அங்கீகரிக்க முடியாது என தெரிவித்துள்ளாரென்பமதயும்;

(ii) மேற்படி நிறுவனங்களின் கணக்குகள் குறித்து கணக்காய்வாளர் நாயகத்தால் மறுப்பறிக்கையொன்று வழங்கப்பட்டுள்ளதென்பதையும் அவர் அறிவாறா?

(ஆ) (i) கணக்காய்வாளர் நாயகத்தின் மேற்படி கண்டறிதல்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பதையும்;

(ii) மேற்கண்டவாறமைந்த மறுப்பறிக்கையொன்று வழங்கியகமைக்காக கணக்காய்வாளர் நாயகம் நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக வேறொருவர் நியமிக்கப்படவுள்ளாரா என்பதையும்;

(iii) கணக்காய்வாளர் நாயகம் 2007ஆம் ஆண்டுக்கான அறிக்கையிலும் அதற்குப் பிற்பட்ட அறிக்கைகளிலும் வழங்கிய மறுப்பறிக்கைகளின் எண்ணிக்கயையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்தில் பணியாற்றும் பணியாள் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கையையும்;

(ii) மேற்படி திணைக்களமானது, குறைந்த பணியாள் தொகுதியினரையும் கூடிய வேலைப்பழுவையும் கொண்டிருப்பதோடு, அதன் ஊழியர்களுக்கு குறை ஊதியம் செலுத்துவதாகவும் உள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின் நிலைமையைச் சீர்செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் என்ன என்பதையும்

அவர் இச் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0983/ '10

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இருக்கும் திடீர் மரண பிரிசோதகர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளவர்களா என்பதையும்;

(iii) ஒருவருக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவு எவ்வளவு என்பதையும்;

(iv) இப் பதவிக்கான கல்வித் தகைமைகள் என்ன என்பதையும்;

(v) அவர்களை நியமிக்கும் அதிகாரி யார் என்தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குருணாகல் மாவட்டத்தில் இருக்கும் திடீர் மரண பரிசோதகர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவர்களது பெயர்கள் மற்றும் ஒவ்வொரு மரண பரிசோதகர்களினதும் கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.7/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச வங்கிகளிலிருந்து கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுதல்,— அரச வங்கியிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு மேற்பட்ட கடன் வாங்கி மீள செலுத்தத் தவறியவர்களின் பெயர்களை வெளியிடுவதற்காக சட்ட ஏற்பாடுகளை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.8/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் செயற்படுத்தல்,— பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயனுள்ள பங்களிப்பொன்றாக அமைவதற்கு ஏதுவாக அவைகள் ஒரு வருடத்துக்குள் விவாதிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டால் ஆறு மாதங்களுக்குள் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.9/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைத்தல்,— நாட்டில் தேசிய மனப்பாங்கை ஏற்படுத்துமுகமாக பாராளுமன்ற அமர்வு ஆரம்பமாக முன்னரும் ஒத்திவைக்க முன்னரும் பாராளுமன்றத்தில் தேசிய கீதம் இசைக்க வேண்டு மென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.10/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பலமான இலங்கை அடையாளத்தை ஏற்படுத்துதல்,— அரச ஆவணங்களில் ஒருவரது சாதியையும் சமயத்தையும் வெளிப்படுத்த வேண்டுமென்ற தேவைப்பாடு பலமான தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவற்கு தடையாகவும் இடர்ப்பா டகவுமுள்ளதால் இத்தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட வேண்டுமென்று இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.11/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வர்த்தக நோக்கங்களுக்காக சமயத் தலைவர்களின் உருவங்களை பயன்படுத்துவதை தடைசெய்தல்,— சகல சமயங்களும் சமமாக மதிக்கப்படல் வேண்டுமென்பதுடன் புத்தபெருமான், யேசுநாதர், சிவபெருமான், முஹம்மட் நபி (ஸல்) அவர்கள் ஆகியோரின் உருவங்களை வர்த்தக விளம்பரங்களிலோ வேறுவிதமான சமயசார்பற்ற படிவங்களிலோ பயன்படுத்தலை தடைசெய்தலும் வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.12/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறைகளை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்குதல்,— சகலருக்கும் சமமான நியாயத்தை உறுதிப்படுத்துவதற்காக சனநாயகத்தை வலுப்படுத்துவதற்கு பலமான சுதந்திர ஊடகவியலை ஏற்படுத்துவதற்கும் நீதிமன்றங்களை அவமதித்தல் நடைமுறை களை ஒழுங்குபடுத்துவதற்கான புதிய சட்டங்களை ஆக்க வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.13/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் மற்றும் நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.14/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசியல் கட்சிகளினால் தேர்தல் ஆணைக்குழுவுக்கு நிதி கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பித்தல்,— எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளினாலும் பெறப்பட்ட வருமானமும் செலவிடப்பட்ட செலவினமும் பற்றிய கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டுமெனவும் வருடம் தோறும் தேர்தல் ஆணைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.15/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச அலுவலர்களுக்கு தண்டனை வழங்குதல்,— அரச உயர் அலுவலர்கள் தமது சுதந்திர நிலைமையை அரசியல் மயமாக்கி மற்றும் அவர்கள் முறைகேடாக நடந்தால் அதனால் அவர்கள் குற்றவாளிகளாக கண்டுபிடிக்கப்பட்டால் அவர்களுக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரங்களை கையளித்து தண்டனை விதிக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.16/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு பெறும் வயதெல்லையை நீடித்தல்,— அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 65 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டால் விசேட திறமையுள்ள அரச அலுவலர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 70 வருடம்வரை நீடிக்கப்பட வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.17/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வியைப் பாதுகாப்பதற்காக தரப் பாதுகாப்பு பேரவையொன்றை நிறுவுதல்,— பொறுப்பற்ற முறையில் பல்கலைக்கழக பெயர்களை பாவித்து இலங்கையினுள் பல கல்வி நிறுவனங்கள் உருவாக்கப்படுவதனால் கல்வியை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாப்பதற்காக "தரப் பாதுகாப்பு பேரவையொன்றை" சட்டத்தின் மூலம் உடனடியாக நிறுவ வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.18/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 'விசேட வழக்குத் தொடுநர்' எனப்படும் பதவியொன்றை உருவாக்குதல்,— அரச சேவை அரசியல் தலையீடுகளிலிருந்து விலக்குவதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள், அரசாங்க கணக்குக் குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றினால் நிறுவனங்களில் செயற்றிறமை பாதிக்கின்ற மோசடிகள், ஊழல்கள், செயற்றிறமையில்லாமை ஆகியவற்றை கண்டுபிடித்த உடனே பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அவற்றுக்கெதிராக வழக்குத் தொடுக்கப்படுவதற்கு "விசேட வழக்குத் தொடுநர்" எனப்படும் பதவியொன்று உருவாக்கப்பட வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.19/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்துதல்,— இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியத்தில் போன்று, வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள எதிரானதும் சார்பற்றதுமான தாக்கல்கள் ஏதும் இருப்பின் அவைகளை நிவர்த்தி செய்வதற்கும் தணிப்பதற்கும் பூர்வாங்க வரவு செலவுத்திட்ட விவாதமொன்று நடாத்தப்பட வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.20/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வு ஆகிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்க சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.30/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை ஒரு வாரகாலத்தினுள் விண்ணப்பதாரிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்,— ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களை மீளப்பெற விண்ணப்பிப்பவர்களுக்கு ஒரு வார காலத்தினுள் அவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது

பா.31/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளிற்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.42/ '10

கௌரவ அஜித் குமார,— 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துதல்,— இலங்கையில் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் காணி உரிமை பலவித உரிமங்களின் கீழ் வருவதுடன் மேற்படி சட்டத்தினால் வாரப் பயிர்ச்செய்கை முறை ஒழிக்கப்பட்டதனால் தாங்கள் கமத்தொழிலில் ஈடுபட்டுள்ள காணிகளையும் இழக்க நேர்ந்துள்ளதனாலும் சட்டத்தினால் பாதுகாப்பு இல்லாததால் பலவித காணித்தகராறுகள் ஏற்படுகின்றதனாலும் வாரப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட அநீதியை ஒழிப்பதற்காக 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கமத்தொழில் அபிவிருத்தி சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று இப்பாராளு மன்றம் தீர்மானிக்கின்றது.

பா.43/ '10

கௌரவ அஜித் குமார,— உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப் பரப்பைப் பேணிப் பாதுகாத்தல்,— வரலாற்றுக்கு முந்திய யுகத்தில் மத்திய முன்னைய காலத்திற்குரியதென இனங்காணப்பட்டுள்ளதும் தென் மாகாணத்தில் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில் கடற்கரையோரத்தில் அமைந்துள்ளதும் தென்னிலங்கையின் ஹோர்டன் சமவெளி எனப் பிரபல்யமடைந்துள்ளதுமான உஸ்ஸன்கொட மலைத்தொடர் அமைந்துள்ள நிலப்பரப்பு, இலங்கையில் இருபத்தெட்டாயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த திறந்த வெளிக் குடியேற்றமொன்றின் கேத்திரவடிவ ஆயுதங்களும் பாறைகளும் கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பகுதியாகவும் கடல் மற்றும் தரை உயிரியல் பல்வகைத் தன்மையில் பெருமளவு வளங்கள் நிறைந்த நிலப்பகுதியாகவும், சிறந்த கடலாமைகளின் வாழ்விடமாகவும், சுனாமிப் பேரலையினால் மக்களைப் பாதுகாத்த மதிலாகவும் அதிக பெறுமதியை கொண்டிருப்பதனால் இந்நிலப்பகுதியில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள கருத்திட்டங்களை நிறுத்தி விட்டு உடனடியாகப் பேணிப் பாதுகாக்க வேண்டிய சுற்றாடல் தொகுதியொன்றாக பிரகடனப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.50/ '10

கௌரவ அஜித் குமார,— இலங்கையில் மிகப் பெறுமதியான இயற்கை வளங்கள் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களை பாதுகாப்பதற்காக முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையில் மாத்திரமல்லாது உலகிலேயே மிக முக்கியமான இயற்கை வளமாகக் கருதப்படும் சிங்கராஜ காடு, கன்னெலிய பாதுகாப்பு வனம், ரூமஸ்சல கந்த, கொக்கல ஓயா தீவுக் கூட்டல்கள் மற்றும் கண்டல் மரங்கள், மாது கங்கை, ரம்சா ஈரழிப்பு நிலம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்கள் என்பவற்றை பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் முறையான விஞ்ஞான ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.51/ '10

கௌரவ அஜித் குமார,— காலி கோட்டை மற்றும் அதனை அண்டியுள்ள வரலாற்று ரீதியான மற்றும் தொல்பொருள் மரபுரிமைகளைப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் உரிய பயனைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— சுற்றுலா கைத்தொழில் துறையின் மிக முக்கியமான மையமாகவும், வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியில் பெறுமதியைக்கொண்டதும், உலக மரபுரிமையாகக் கருதப்படுகின்றதுமான காலி கோட்டை மதில், காலி கோட்டையின் உள்பகுதியிலும் காலி கோட்டையை அண்டியும் அமைந்துள்ள வரலாற்று மற்றும் தொல்பொருள் ரீதியான மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கும், மேம்படுத்துவதற்கும் அவற்றுடன் தொடர்புடைய அரச நிறுவனங்களினதும் மக்களினதும் பங்கேற்புடன் முறையான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தி இந்த வரலாற்று ரீதியான மரபுரிமைகளின் உரிய பயனை நமது நாடு பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.54/ '10

கௌரவ திலங்க சுமதிபால,— மருத்துவத் துறையின் தொழில் சார் பெறுமதியினைப் பேணல்,— உள்நாட்டு, சர்வதேச மருத்துவ முறையினுள் தொழிற்தகைமை மற்றும் அனுபவத்தினைக் கொண்டிராத மருத்துவர்கள் சிகிச்சையளிப்பதில் ஈடுபட்டுள்ளமையினால், சாதாரண நோயாளர்கள் பாரிய சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டி நேர்ந்துள்ளதால் பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளதாதலாலும், இதன் மூலம் மருத்துவத் துறையில் பணியாற்றும் தகைமை பெற்ற தொழில்சார் மருத்துவர்கள் சமூகத்தில் அவமானத்திற்கு உள்ளாகியுள்ளதாதலாலும், மருத்துவத் துறையின் தொழில்சார் பெறுமதியினை பேணுமுகமாக, ஒழுங்காகவும் முறைசார் ரீதியிலும் சட்ட ரீதியிலும் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.55/ ’10

கௌரவ திலங்க சுமதிபால,— ஊடக சுதந்திரத்தையும் தகவல் அறியும் உரிமையையும் உறுதிப்படுத்தல்,— அரசியலமைப்பின் தகவல்களை அறிவதற்கும் வெளியிடுவதற்குமுள்ள உரிமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாலும், தொழில்நுட்பம் முன்னேறிவரும் உலகில் உண்மையை ஒழிக்கவோ மூடி மறைக்கவோ சந்தர்ப்பம் இல்லாததாலும், சனநாயக நாடொன்றில் அனைத்து பிரசைகளுக்கும் சுதந்திர ஊடகங்கள் மூலம் அறிவையும் புரிந்துணர்வையும் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.56/ ’10

கௌரவ திலங்க சுமதிபால,— விளையாட்டின் மூலம் நோயற்ற சமூதாயமொன்றை உருவாக்குதல்,— பிள்ளைப் பருவத்திலேயே பிள்ளைகளை விளையாட்டில் ஈடுபடவைப்பதன் மூலம் நோயற்ற சமூதாயத்தை உருவாக்குவதற்கும், இயற்கையிலேயே திறமைகளைக் கொண்டுள்ள பிள்ளைகளை சர்வதேச மட்டத்திற்கு ஆற்றுப்படுத்துவதற்கும்/உலகப் புகழ்வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி நாட்டிற்கு நற்பெயரை பெற்றுக் கொள்ளும் வகையில் இன பேதமற்ற வகுப்புப் பேதமற்ற நியாயமான செயல் முறையொன்று அரச மட்டத்தில் வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கஙகளிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல்,– பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ ’10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.65/ ’10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— காதி நீதிமன்ற முறைமைக்கு உயர்ந்த இடத்தைப் பெற்றுக்கொடுத்தல்,— 1929 ஆம் ஆண்டின் முஸ்லிம் விவாக, விவாகரத்து கட்டளைச்சட்டத்தின் கீழ் காதி நீதிமன்ற முறைமை இலங்கையில் தாபிக்கப்பட்டு, அதன் பின்னர் 1951 இல் முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட அக்கட்டளைச்சட்டம், முஸ்லிம் குடும்பங்களில் எழுகின்ற பிணக்குகள் தொடர்பான அனைத்து விடயங்களையும் தீர்மானிப்பதற்கு உரித்தளிக்கப்பட்ட, காதி நீதிபதிகளின் தத்துவங்கள் மேம்படுத்தப்பட வேண்டும் என்பதோடு, முறைமையின் கௌரவத்திற்கு பொருத்தமான இடங்களில் அமர்வுகள் அத்தகைய முறையில் நடத்தப்படுவதற்கு ஏற்றவாறு காதி நீதிமன்ற முறைமையின் அந்தஸ்து தரமுயர்த்தப்பட வேண்டும் என்றும் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் காதி நீதிபதிகள் நியமிக்கப்படுவதனால் ஏனைய நீதிமன்ற அதிகாரிகளுக்கு கொடுக்கப்படக்கூடிய மதிப்புமிக்க, ஏற்றுக்கொள்ளத்தக்க சம்பள அமைப்பொன்றில் அவர்கள் வைக்கப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ ‘10

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 71/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்களுக்கு சமாதான நீதவான் நியமனங்களை வழங்கல்,— சுதேச ஆயுர்வேத மருத்துவர்கள் பணத்தையும் சிறப்புரிமைகளையும் எதிர்பார்க்காமல் அவர்களால் சமூகத்திற்கு ஆற்றப்படவேண்டிய சமூகப் பொறுப்பாகக் கருதி, குறிப்பாக கிராமிய மக்களுக்கு அளப்பெரும் சேவையை ஆற்றிவருவதனால், அச்சேவையை கௌரவிக்கும் வகையில் ஆயுர்வேத மருத்துவ சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைவருக்கும் சமாதான நீதவான் பதவிகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 72/ '10

கௌரவ புத்திக பதிரண,— சமாதான நீதவான் பதவிகளை வழங்குவதற்கான முறையான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,— சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதும் சமுகத்திற்கு அளப்பரிய சேவையாற்றுவதுமான சமாதான நீதவான் பதவிகள், ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதிகளுக்குப் புறம்பாக வழங்கப்படுவதன் காரணமாக அப்பதவியின் கௌரவமும் அங்கீகாரமும் படிப்படியாக குறைவடைவதனால் குறித்த நியமனங்களுக்கென முறையான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுன்றம் கருதுகின்றது.

பா. 74/ '10

கௌரவ புத்திக பதிரண,— சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணல்,— சுனாமி அனர்த்தம் காரணமாக ஏதேனும் பிரச்சினைக்கு முகம் கொடுத்து இது வரை அப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காமல் இருப்பின், பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மாவட்ட செயலாளர் பிரிவு அடிப்படையில் ஆராய்ந்து, அவர்கள் முகம்கொடுத்துள்ள அல்லது தற்போது முகம்கொடுக்கும் பிரச்சினைகளை குறைப்பதற்கான வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/ '10

கௌரவ புத்திக பதிரண,— வீட்டிலிருந்து தொழில் புரிவோருக்கான தேசிய கொள்கையொன்றை வகுத்தல்,— இலங்கையில் பலதரப்பட்ட தொழில் வாய்ப்புத் துறைகளில் பல தரப்பட்ட உற்பத்திப் பணிகளில் ஈடுபடும் சுமார் பத்து இலட்சம் பேர்களான வீட்டிலிருந்து தொழில் புரிவோர்களுக்காக அரசியல் அதிகாரம் வாய்ந்தோர்கள், அதனுடன் தொடர்புபட்ட சகல துறைகளினதும் தேர்ச்சிபெற்றவர்கள் புத்தி ஜீவிகள் உட்பட அரச, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்று முறையான தேசிய கொள்கையொன்றை வகுத்து அதனை துரிதமாக நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/ '10

கௌரவ புத்திக பதிரண,— நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ளமுடியாதுள்ள வயற்காணிகளை பயனுள்ள நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துதல்,— வயற் காணிகளை நிரப்புவதற்கான சட்டம் மீறப்படாத வகையில், ஒழுங்குமுறையான ஆய்வு ஒன்றின் மூலம் இனங்காணப்பட்டதன் பின்னர் எவ்வகையிலும் நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத வயற் காணிகளில் பயனுள்ள விவசாய உற்பத்திகளை மட்டும் பயிரிடுவதற்கும், நிர்மாணப் பணிகளுக்காக எவ்வித வாய்ப்புகளும் கிடைக்காத வகையிலுமான நிகழ்ச்சித் திட்டங்களை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 77/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— மாவட்ட மட்டத்தில் தகவல் மத்திய நிலையங்களை நிறுவுதல்,— புவியியல் அமைவு, வரலாற்றுப் பின்னணி, பயிரிடப்படும் பயிரினங்கள், வீதி முறைமை அரச அலுவலகங்கள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், புகையிரத நிலையங்கள் மற்றும் பேரூந்து தரிப்பிடங்கள் ஆகிய அனைத்து தகவல்களும் கணனிமயப்படுத்தப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட தகவல் மத்திய நிலையங்களை நிறுவுவதற்கும், அதன் முதலாவது கட்டத்தின் போது மகாகாண மட்டத்திலும் இரண்டாவது கட்டத்தின் போது மாவட்ட மட்டத்திலும் மூன்றாவது கட்டத்தின் போது பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச மட்டத்திலும் இந்நிலையங்களை நிறுவவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை ஒழுங்கு முறைப்படுத்தல்,— இலங்கையில் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளின் கல்வி மற்றும் நிர்வாகத்தை மேலும் ஒழுங்கு முறைப்படுத்துவதற்கும் பௌத்த அறநெறி பாசாலைகளில் காணப்படும் அறநெறி இறுதிப் பரீட்சை மற்றும் அறநெறி தர்மாசார்ய பரீட்சை மற்றும் சகல மதங்களினதும் அறநெறி பாடசாலைகளில் நடாத்தப்படும் இவற்றுக்கு இணையான பரீட்சைகளின் சான்றிதழ்களுக்கு உரிய அங்கீகாரத்தை வழங்குதலும், அறநெறிப் பாடசாலைக்கு தொடர்ச்சியான மனித வளங்களுடன் பௌதீக வளங்களையும் வழங்குவதன் மூலம் அறநெறிப் பாடசாலைகளுக்கு சமுகமளிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை வகுத்தலும் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— நாய்கள், பூனைகள் போன்ற செல்லப் பிராணிகளை வளர்த்தல் தொடர்பான சட்டங்களை வகுத்தல்,— வீடுகளில் அல்லது விற்பனை செய்வதற்காக வளர்க்கப்படும் நாய்கள், பூனைகள் போன்ற செல்லப்பிராணிகளை உள்ளூராட்சி நிறுவனங்களில் பதிவு செய்யத் தேவையான சட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்பதோடு, குறித்த பிராணிகளின் குட்டிகளை, சட்டரீதியான அனுமதி பெற்ற நிலையங்களில் மாத்திரம் விற்பனை செய்தல் வேண்டுமெனவும் அவ்வாறல்லாத இடங்களில் வளர்க்கப்படும் பெண்ணினப் பிராணிகளை கட்டாயமாக மலடாக்கலுக்கு உட்படுத்துவதற்கும், தேவையான சட்டங்கள் வகுக்கப்படவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 81/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ ’10

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ ’10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ ’10

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ ’10

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ ’10

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ '10

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ '10

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ ‘10

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ ‘10

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ ‘10

கௌரவ புத்திக பதிரன,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ ‘10

கௌரவ புத்திக பதிரன,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

கௌரவ புத்திக பத்திரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிகக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 104/ '10

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்தல்,— "கற்பகதரு" எனஅழைக்கப்படும் பொதுமக்களுக்கு மிக்க பயனைப் பெற்றுத்தரும் பனை மர விளைச்சலுக்கு ஊக்கமளித்து பனைப் பொருள் அபிவிருத்திக்காய் அனைத்து நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென இச்சபை தீர்மானிக்கின்றது.

பா. 105/ '10

கௌரவ புத்திக பத்திரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ '10

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ '10

கௌரவ புத்திக பத்திரன,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ '10

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ '10

கௌரவ புத்திக பத்திரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/ '10

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/ '10

கௌரவ புத்திக பத்திரன,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர் களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/ '10

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.117/ '10

கௌரவ ருவண் ரணதுங்க,— உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ள அரசாங்க அளிப்பு பத்திர காணிகளின் உப பிரிவாக்கல் அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைத்தல்,— ஜய பூமி, சுவர்ண பூமி,ரத்ன பூமி ஆகிய அரசாங்கக் காணி அளிப்புப் பத்திரங்களைக் கொண்டுள்ளவர்களின் காணிகளில் உப பிரிவாக்கல் தடை செய்யப்பட்டுள்ளதெனினும், ஆரம்பக் காணி பெற்றவர்களின் இரண்டாம் பரம்பரையின் உரிமையை உறுதி செய்வதற்கும் அவர்களின் வீடு, தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கும் உப பிரிவாக்கலுக்கான தேவை தோன்றும் போது மாகாண ஆணையாளர், காணி ஆணையாளர் மற்றும் ஜனாதிபதி செயலகத்துடனான தற்போது நடைமுறையில் உள்ள நீண்ட செயன்முறையை குறுகியதாக்கி உப பிரிவாக்க அதிகாரத்தை பிரதேச செயலாளர்களிடம் ஒப்படைப்பதற்கு தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ '10

கௌரவ புத்திக பத்திரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ '10

கௌரவ புத்திக பத்திரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

கௌரவ புத்திக பத்திரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.122/ '11

கௌரவ ருவன் ரணதுங்க,— அரசாங்க வங்கிகளின் வட்டி செலுத்துதலுக்கும் வட்டி அறவிடலுக்கும் இடையே காணப்படுகின்ற வித்தியாசத்தைக் குறைத்தல்,— அரசாங்க வங்கிகளில் சாதாரண வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் 4 % முதல் 4.5 % வரையிலும் நிலையான வைப்புகளுக்கு செலுத்தப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 8 % ஆகவும், வங்கிகளால் வீடமைப்பு, வர்த்தகம் மற்றும் விவசாயக் கடன்களுக்கு அறவிடப்படுகின்ற வட்டி விகிதம் சுமார் 12% முதல் 13% வரையிலும் உள்ளதால், மக்களுக்கும் சிறிய அளவிலான வர்த்தகர்களுக்கும் கைகொடுப்பதற்கும் அவர்களை ஊக்குவிப்பதற்குமாக, இவ்வாறு அறவிடப்படுகின்ற வட்டிக்கும் செலுத்தப்படுகின்ற வட்டிக்கும் இடையிலான வித்தியாசத்தைக் குறைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.123/ '11

கௌரவ ருவன் ரணதுங்க,— பட்டதாரி கிராம உத்தியோகத்தர்களை கௌரவிப்பதற்கான ஒரு கொடுப்பனவைச் செலுத்துதல்,— அரசாங்க சேவையை கிராமிய மட்டத்தில் மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக சேவையாற்றுகின்ற கிராம உத்தியோகத்தர்கள் க.பொ.த. (உ/த) பரீட்சையின் பின்னர் போட்டிப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள போதிலும், தற்போது சேவையாற்றி வருகின்ற கிராம அலுவலர்களில் சுமார் 30 % முதல் 40 % வரையிலானோர் பட்டத் தகைமைகளைப் பெற்றுள்ளனராதலாலும், இதற்கென எவ்வித விசேட கவனமும் இதுவரை செலுத்தப்படாதுள்ளதனாலும், பட்டத் தகைமையை கௌரவிக்கு முகமாக பட்டதாரி கிராம அலுவலர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்லது கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.124/ '11

கௌரவ ருவன் ரணதுங்க,- கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்தல்,- தினசரி பத்திரிகைகள் மற்றும் வார சஞசிகைகளில் புத்தர் பெருமானின் உருவப் படங்களும் சிலைகளின் படங்களும் எதுவித கட்டுப்பாடுமின்றி எல்லையற்ற வகையில் அச்சிடப்படுவதோடு அந்த அட்டைகள் பல்வேறுபட்ட பொருட்ளின் உறைகளாகவும் வேறு பொருத்தமற்ற அலுவல்களுக்காகவும் பயன்படுத்தப்படுவது புத்தர் பெருமானுக்குச் செய்கின்ற அவமரியாதையாகுமென்பதால் 2600 ஆம் புத்தர் ஜெயந்தி கொண்டாட்டத்தையும் கருத்திற்கொண்டு இதன் பின்னர் கல்விசார் நூல்கள் தவிர்ந்த தினசரி பத்திரிகைகளிலும் வாராந்த சஞ்சிகைகளிலும் புத்தர் பெருமானின் உருவப் படங்கள் பிரசுரிக்கப்படுவதை தடைசெய்வதற்குத் தேவையான சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
## (2011, யூலை 08, வெள்ளிக்கிழமை)

0183/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) சூரியவெவ பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு/நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதிலிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0882/ '10

கௌரவ ராஜீவ விஜேசிங்க,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2010 ஜுலை 29 ஆம் திகதிய " டெய்லி மிறர்" பத்திரிகையில் வெளிவந்த ஒரு கட்டுரையானது, பாலியல் மற்றும் பால்நிலை சமத்துவம் பற்றிய விடயங்கள் தொடர்புடைய சட்டங்களில் மாற்றத்திற்காகப் போராடும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் போதைப் பொருட்களின் அதீத பாவனை போன்ற சட்டத்திற்கு எதிரான செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருப்பதாக தெரிவிப்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) சட்டத்திற்கு மாறான செயற்பாடுகள் குறித்த தகவல்களை தம்மிடம் வைத்திருந்து அவற்றை வெளிப்படுத்தும பத்திரிகைகள் அச்செயற்பாடுகள் குறித்த சான்றுகளைக் கொண்டிருக்கின்றனவா என்பதை விசாரித்தறிவதை உறுதிப்படுத்துவதற்கும்,

(ii) சட்டம் மதிக்கப்பட வேண்டும் என்பதையும், சட்டத்தில் மாற்றம் ஏற்படுத்துவது ஏற்றுக்கொள்ளத்தக்க நடைமுறை என்பதையும், அதனை கடுமையான தொனியில் கடிந்துரைத்தலாகாது என்பதையும் பத்திரிகைக்கு அறியத்தருவதற்கும்

அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(இ) (i) பாலியல் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பான இலங்கை சட்ட ஆணைக்குழுவின் கருத்துக்கள்; மேற்சொன்ன கட்டுரையில்; கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) சிபாரிசு செய்யப்பட்ட சட்டத்திலான மாற்றங்களை அமுல்படுத்துவதற்காக அமைச்சால் முன்வைக்கப்படும் காலக்கெடு என்பன என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0903 / '10

கௌரவ மொஹமட் அஸ்லம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அலுத்கம, தர்கா நகர், தேசிய கல்வியியல் கல்லூரியில் இணைந்த விரிவுரையாளராக கடைமையாற்றுகின்ற திரு எம்.ஆர்.எம் சில்மி இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்புக்கு உள்ளீர்ப்பதற்காக 2000/11/05ஆம் திகதியன்று நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியுள்ளாரென்பதையும்,

(ii) அனைத்து தகைமைகளையும் பூர்த்திச்செய்திருந்தும் களுத்துறை வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள அவரது பிரத்தியேக ஆவணக் கோப்பு பூரணப்படுத் தப்படாமையினாலும் உரிய விதத்தில் பராமரிக்கப்படாமையினாலும் எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு இவருக்கு கிடைக்கவில்லையென்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) 82/2000 ஆம் இலக்க 2000/8/24 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி பதவி உயர்வுக்காக பட்டதாரியான இணைந்த விரிவுரையாளரொருவர் 2000/8/24 ஆம் திகதிக்கு 5 வருட சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருப்பதன் தேவையை முதுமாணி பட்டதாரியான (M.A) திரு. சில்மி 2000 /7 /11 ஆம் திகதியளவில் பூர்த்திசெய்துள்ளாரென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில், திரு. சில்மிக்கு மேற்படி பதவி உயர்வு வழங்குவதை மேலும் தாமதப்படுத்துவதற்கான காரணங்கள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) 2000/12/08 ஆம் திகதி முதல் நடைமுறைக்குவரும் வகையில் திரு. சில்மியை இலங்கை கல்வி நிருவாக சேவையின் III ஆம் வகுப்புக்கு உள்ளீர்த்து, அப் பதவிக்குரிய சம்பள மட்டத்தின் பிரகாரம் அனைத்து நிலுவைச் சமபளங்களையும் கொடுப்பனவுகளையும் தாமதமின்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0184/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அம்பாந்தோட்டை பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா வென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு/நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதிலிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0185/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) லுனுகம்வெஹெர பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவா என்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வளவென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு/நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதிலிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0186/ '10

கௌரவ அஜித் குமார,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) திஸ்ஸமகாராம பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிகள் உள்ளனவாவென்பதையும்,

(ii) ஒவ்வொரு காணியினதும் பெயர், அளவு, சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவு, காணியின் தன்மை, வருடாந்த வருமானம் எவ்வள வென்பதையும்,

(iii) மேற்படி காணிகளின் உரிமை சட்டபூர்வமாக ஆட்களுக்கு/நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளதாவென்பதையும்,

(iv) அது எத்தகைய பணிக்காக, எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) ஆட்களின் அல்லது நிறுவனங்களின் பெயர், முகவரி, கையளித்த திகதி, காணியின் அளவு, கால எல்லை, ஆணைக்குழுவிற்கு வருடாந்தம் கிடைக்கின்ற வருமானம் எவ்வளவு ஆகிய விபரங்களையும்

அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) ஆணைக்குழுவின் காணிகளை சட்டபூர்வமற்ற விதத்தில் ஆட்கள் அல்லது நிறுவனங்கள் உடைமையுரிமை கொண்டுள்ளார்களாவென்பதையும்,

(ii) ஆமெனில், அவர்களின் பெயர்கள், காணியின் அளவு மற்றும் எப்போதி லிருந்து என்பதையும்,

(iii) அது சம்பந்தமாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை யாதென்பதையும்,

(iv) தொடக்கத்திலும் 2009.08.01 ஆந் தேதியிலும் ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக காணப்பட்ட காணியின் அளவு யாதென்பதையும்,

(v) தொடக்கத்தில் இருந்த காணிகளின் அளவில் பாராதீனப்படுத்தப்பட்ட அளவு யாதென்பதையும்,

(vi) உடைமை பாராதீனப்படுத்தப்பட்டவர்களின் பெயர், முகவரி மற்றும் காணி அளவு யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0778/ '10

கௌரவ அஜித் குமார,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பல்கலைக்கழகங்கள் மாணியங்கள் ஆணைக்குழுவின் முன் அங்கீகாரமின்றி கலாநிதி (திருமதி) மிராணி வீரசூரிய ஒரு சிரேஷ்ட விரிவுரையாளராக இலங்கை றுகுணு பல்கலைக்கழகத்திற்கு நியமிக்கப்பட்டார் என்பதையும்;

(ii) இப் பல்கலைக்கழகத்தில் இணைவதற்கு முன்னர் அவர் சுகாதாரத் திணைக்களத்திலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தார் என்பதையும்;

(iii) அவர் தற்போது அதே பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் ஒட்டுண்ணியல் பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) அரச சேவையிலிருந்து தான் பணி நீக்கம் செய்யப்பட்ட விடயத்தை அவர் பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு அறிவித்தாரா என்பதையும்;

(ii) ஒட்டுண்ணியலில் சிரேஷ்ட பேராசிரியராக நியமிக்கப்பட்ட போது, அவர் பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படை கல்வித் தகைமைகளைக் கொண்டிருந்தாரா என்பதையும்;

(iii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 86 (அ) பிரிவின் கீழ் பல்கலைக்கழக மேன்முறையீட்டுச் சபைக்கு மேற்படி நியமனங் களை ஆற்றுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?